கோயில் குளத்தில் எவ்வளவு மழை பெய்தாலும், அந்தக் குளம் நிரம்புவதில்லை. அதனைச் சீர் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குளங்களை அரசு அதிகாரிகள் மற்றும் துறை ஆணையருடன் சேர்ந்து நானும் ஆய்வு செய்தேன். அந்தக் குளத்தில் தண்ணீர் சரியாக நிரம்புவதில்லை என்று ஏற்கெனவே கோரிக்கை வந்திருக்கிறது. அதனடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அந்தக் குளத்தில் களிமண்ணை நிரப்பி, சீர் செய்ய ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) மாவட்ட அளவிலும் அதற்குக்கீழ் உள்ள நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் நியமனங்களில் அகில இந்திய தேர்வு முறையை அறிமுகம் செய்ய மத்திய அரசு முயற்சித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே சேர்வதற்கு 'நீட்' தேர்வு இருப்பதைப்போல, மாவட்ட அளவிலும், அதற்குக்கீழ் இருக்கக்கூடிய நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் நியமனங்களில் அகில இந்திய தேர்வு முறையைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு எல்லா வகைகளிலும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.*

2017 ஜூலை 12] [திரு. மு.க. ஸ்டாலின்]
அரசியல் சட்டம் 6-வது அத்தியாயத்தில் இருக்கக்கூடிய 233 முதல் 237 வரையுள்ள பிரிவுகள் மாவட்ட அளவிலும், அதற்குக்கீழ் உள்ள நீதிமன்றங்களிலும் நீதிபதிகளை நியமிக்கக்கூடிய அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கும், அரசாங்கத்திற்கும் வழங்குகிறது. இதுவரையிலே, அரசுப் பணியாளர் தேர்வாணையம்தான் தேர்வுகளை நடத்தி கீழ் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை தேர்வு செய்து வருகிறது. ஆனால், மத்திய சட்ட இலாகாவில் நீதித் துறையை கவனிக்கக்கூடிய செயலாளர் உச்ச நீதிமன்றத்திற்கு எழுதியிருக்கக்கூடிய கடிதத்தில், அகில இந்திய அளவிலே மாவட்ட அளவிலான நீதிபதிகளையும் தேர்வு செய்யலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே, உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால், மத்திய அரசின் இந்த முயற்சி கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக அமைந்திருக்கிறது.

ஏற்கெனவே, பா.ஜ.க. ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில், அகில இந்திய அளவிலே நீதிபதியைத் தேர்வு செய்யக்கூடிய முயற்சியை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திலே affidavit தாக்கல் செய்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, நீதித் துறை நிருவாகத்தில் மாநில அரசுக்கு இருக்கக்கூடிய உரிமையைப் பறிக்கக்கூடிய வகையிலே, இந்தத் தேர்வு முறையை மத்திய அரசு புகுத்த நினைப்பது, மாநில சுயாட்சியினுடைய கொள்கைக்கு முற்றிலும் விரோதமாக அமைந்துவிடும். எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கும், சென்னை, உயர் நீதிமன்றத்திற்கும் இருக்கக்கூடிய நீதித் துறை நியமன அதிகாரங்களைப் பறிக்கக்கூடியவிதத்திலே இது அமைந்துவிடும் என்பதால், கீழ்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில், அகில இந்திய தேர்வு முறை தேவையில்லை என்ற கருத்தினை வலியுறுத்தி மத்திய அரசுக்கு, தமிழக அரசு அழுத்தத்தைத் தர வேண்டும் என்பதுதான்.

அதேநேரத்தில், மாநிலத்தில் இருக்கக்கூடிய கீழ் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிக்க அகில இந்திய தேர்வு தேவையில்லை என்பதை மூத்த வழக்கறிஞர் மூலமாக உச்ச நீதிமன்றத்திற்கு மாநில அரசு முறைப்படி தெரிவிக்க வேண்டும். 'நீட்' தேர்வு நடத்துவதால், மருத்துவக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்க்கக்கூடிய மாநில அரசினுடைய உரிமை பறிபோகிறது. இப்பொழுது கீழ் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் பதவிகளுக்கும்

அகில இந்திய தேர்வு முறையைக் கொண்டுவருவதால், மாநில அரசின் உரிமை பறிபோகிறது.

முற்பகல் 11–20

மாநில அரசு என்று ஒன்று இருப்பதையே மத்திய அரசு அங்கீகரிக்காமல், இதுபோன்ற அதிகார பறிப்பில் முனைப்புக் காட்டுவது, கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக அமைந்துவிடும். 7 மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்ததைப்போல, தமிழக அரசும் எதிர்ப்பைத் தெரிவித்து, உடனடியாக affidavit தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் தங்கள் மூலமாக இந்த அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பொருள் குறித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

(ஆ) செய்யூர் தொகுதி, புத்திரன்கோட்டை, ஆலமரம் விழுந்து உயிரிழந்த இருவருக்கும், காயமுற்ற ஒருவரின் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் ஒன்றியம், புத்திரன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் திரு. சுப்பிரமணி, வயது 50; திரு. கபாலி என்பவரின் மகன் திரு. முருகன், வயது 35; மற்றும் திரு. தண்டபாணி என்பவரின் மகன் திரு. சுதர்சனம், வயது 28 ஆகிய மூன்று பேரும் அருகிலுள்ள சூனாம்பேட்டிற்குச் செல்லும் வழியில் கல்பட்டு கூட்ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது, அங்கே எரிந்து கொண்டிருந்த ஆலமரமானது இந்த மூன்று பேரின்மீது விழுந்ததால் திரு. முருகன் என்பவர் சம்பவ இடத்திலே உடல் நசுங்கி உயிரிழந்தார் என்பதையும். . . (குறுக்கீடு)